


ஏர் 9 • உழவு 05 • திருவள்ளுவர் ஆண்டு 2055
விலை ரூ.20/- • மே 2024 (சித்திரை - வைகாசி)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண். : 44/2016

பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கே.கே.ரமேஷ் |
| துணைத்தலைவர்கள் | : | வீ.க.செல்வக்குமார் |
| | : | வி.பி.வீரப்பன் |
| செயலாளர் | : | எம்.அமராபதி |
| பொருளாளர் | : | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| இணைச்செயலாளர்கள் | : | சி.அரவிந்தன் |
| | : | பி.ரவி |
| தணிக்கையாளர் | : | ஆர்.பாலசந்திரன் |

## செயற்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| எம்.பொன்னுசாமி | சி.கொங்குவேள் |
| கே.சந்திரமோகன் | எஸ்.சீனிவாசன் |
| டத்தோ எஸ்.பிரகதீஷ்குமார் | விசா எம்.சண்முகம் |
| பி.வி.கல்யாணசுந்தரம் | டி.எஸ்.சந்திரசேகர் |
| டாக்டர் எஸ்.ராஜாமணி | எஸ்.ஜெகநாதன் |
| கே.ஜெகதீசன் | கே.நித்தியானந்தன் |
| ஆர்.சண்முகவேல் | ஆர்.கந்தகார்த்திக் |
| கே.கே.முருகன் | பி.பிரேம்குமார் |
| | சாந்தி சிவசண்முகம் |

**Published by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No:34 Srinivasa Perumal Sannathi 1st St,
Royapettah, Chennai 600014.

**Printed by** :
A.Sheik Dawood, Dawood Graphics,
No.63,Muthu Mudali St, Royapettah, Chennai-600 014.

**Editor K.K.Ramesh**

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலையங்கம்

அன்பு கொங்குச் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்,

உடலினை இயந்திரமாக்கி, உலகத்தை இயங்கவைக்கும் உன்னத உழைப்பாளிகளுக்கு மே 1, உழைப்பாளர் தின நல்வாழ்த்துக்கள்.

ஏப்ரல் 17ம் நாள் மாவீரன் தீரன் சின்னமலை கவுண்டரின் பிறந்த நாளை அரசு விழாவாக கிண்டி, தொழிற்பேட்டையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மலர் மாலை தூவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் நானும், செயலாளர் முன்னாள் செயலாளர், பேரவைத்தலைவர் மற்றும் அனைத்துக் கட்சித்தலைவர்கள் கலந்துக்கொண்டு மரியாதை செலுத்தப்பட்டது.

புகழ்பெற்ற நேரு ஸ்டேடியத்தில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் விளையாட்டு விழா மற்றும் குழந்தைகள் விழா ஜூலை மாதம் 21–07–2024 சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவில் கொங்கு இளைஞர்கள் பெருவாரியாகப் பங்குப்பெற்று பரிசுகளையும் சிறப்பு விருந்தினர்களிடம் பரிசுப்பெற்று தங்கள் திறமைகளை வெளிபாடு செய்வது மட்டுமில்லாமல் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து நம் உறவை மேம்படுத்திக் கொண்டாடுவோம். இவ்விழாவில் 6 முதல் 90 வயது இளைஞர்கள் வரை கலந்துக் கொள்ள அன்புடன் அழைக்கிறேன். இவ்விழாவில் கொங்கு குடும்பத்தார் மகன், மகளுக்கு ஏற்ற வரன் வார்த்து கொள்ளவும், தங்களுக்கு ஏற்ற குடும்பத்தை தேர்ந்தெடுக்க ஒரு விழாவாக அமையும். அதுமட்டுமின்றி தொழில் சம்பந்தமாக ஆலோசிக்கவும், இளைஞர்கள் வேலை செய்யும் இடங்களை ஒருவருக்கொருவர் கலந்து ஆலோசித்து தேர்வு கொள்ளும் விழாவாக அமையும்.

சங்கங்கள் இது போன்ற விழாக்கள் நடத்துவதன் நோக்கம் நமது சமுதாயத்தை உலக அளவில் மென்மேலும் மேம்படுத்த தொடர்புகள் ஏற்படுத்த, நாம் ஒருவருக்கொருவர் அறிந்துக்கொள்ள ஒற்றுமையுடன் வாழ்வில் உயர்வதற்கு நாம் ஒவ்வொருவரும் ஊக்குவித்துக்கொள்ள வேண்டும். நம் குல பெருமைகளை இளைஞர்களுக்கு எடுத்துச்சொல்லி அதன் பன்பாட்டுக்களையும் சடங்குகளையும் நிலைநாட்டுவதற்கும், பிற சமுதாயங்கள் வளருவதுபோல் நம் சமுதாயமும் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் இதுபோல விழாக்கள் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகையால் நம் கொங்கு சொந்தங்கள் இது போன்ற விழாக்களில் கலந்துக்கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குடும்பவிழா சென்னை, தேனாம்பேட்டையில் அமைந்துள்ள காமராஜர் அரங்கத்தில் 28–07–2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை அன்று சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நமது கொங்கு சொந்தங்கள் சங்கமிக்கும் இந்த மாபெரும் திருவிழாவில் நமது உறவுகள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சங்கத்தின் சார்பாக அன்புடன் அழைக்கிறேன்.

மேலும், தாங்கள் சென்ற வருடம் சென்னை கொங்கு குடும்பவிழாவிற்கு மனமுவந்து கொடுத்த விளம்பர நன்கொடையை விழா சிறப்பாக நடைபெறுவதற்கும் மற்றும் சமுதாயப்பணியாற்றுவதற்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. அதேபோல் இந்த வருடமும் தங்களுடைய நிறுவன விளம்பரங்களை தந்து நிதி வழங்கியும் ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் துணைத்தலைவர் திரு.வி.பி.வீரப்பன் அவர்களது மாமியார் 23–04–2024 அன்று இயற்கை எய்தினார். நமது சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இறங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் மற்றும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னாள் மூத்த செயற்குழு உறுப்பினர் திருமதி சாரதா சின்னசாமி அவர்களின் கணவரும் மூத்த வழக்கறிஞர் சி.சின்னசாமி அவர்கள் 07–05–2024 இயற்கை மரணம் அடைந்தார். சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இறங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்கு மாதந்தோறும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திலிருந்து மாத மலர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் சுமார் 400 புத்தகங்கள் விலாசம் மற்றும் அலைபேசி எண். தவறாக இருப்பதாலும், சங்கத்திற்கு திரும்ப வந்துவிடுகிறது. ஆகையால் உறுப்பினர்கள் இந்த மலரில் படிவம் இணைத்துள்ளது. அதனை சரியான விவரங்களைப் பூர்த்தி செய்து சங்கத்திற்கு அனுப்பு வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தற்போது கோடை காலம் என்பதால் அக்னி நட்சத்திரம் மே மாதம் 4ம் சனிக்கிழமை நாள் தொடங்கி மே மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை அன்று முடிவடைகிறது எனவே நமது சொந்தங்கள் அனைவரும் அதனை எதிர்கொள்ளும் வகையில் நமது டாக்டர் வி.எஸ்.நடராஜன் இம்மலரில் எழுதியுள்ள கட்டுரையைப்படித்து தங்களது கோடை கால வெப்பத்திலிருந்து உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்வோம்.

மேலும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினராக விரும்பும் சொந்தங்கள் கொங்குநண்பர்கள் சங்கத்தின் www.chennaikongunanbargalsangam இணையதளத்தில் Membership Form Download செய்தும் அல்லது இம்மலரில் வெளியிட்டுள்ள உறுப்பினர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தங்களுக்கு தெரிந்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று சங்க விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதற்குண்டான தொகை காசோலையாகவோ, பணமாகவோ படிவத்தில் உள்ள வங்கிகணக்கிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!



**கே.கே.ரமேஷ்**
தலைவர்
செல் : 98410 76117

# 2024 சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சமுதாயப்பணியாற்றும் மற்றும் குடும்பவிழாவை சிறப்பாக நடத்தும் செயற்குழுவினர்கள்



திரு. K.K.ரமேஷ் B.E., M.B.A.,

திரு. M.அமராபதி B.B.A.,

திரு. V.R.பாலசுப்பிரமணியன் @ இசைபாலு B.Sc., B.L.,

திரு. M.பொன்னுசாமி

டத்தோ S.பிரகதீஷ்குமார்

திரு. K.சந்திரமோகன்

திரு. P.V.கல்யாணசுந்தரம்

திரு. C.கொங்குவேள்

*டாக்டர் S.ராஜாமணி

திரு. R.சண்முகவேல்

திரு. K.ஜெகதீசன்

திரு. S.சீனிவாசன்

திரு. K.K.முருகன்

திரு. D.S.சந்திரசேகர்

திரு. C.அரவிந்தன்

*விசா. M.சண்முகம்

திரு. V.K.செல்வக்குமார்

திரு. V.P.வீரப்பன்

திரு. K.நித்தியானந்தன்

திரு. S.ஜெகநாதன்

திரு. P.ரவி

*திரு. R.கந்தகார்த்திக்

*திரு. P.பிரேம்குமார்

*திருமதி சாந்தி சிவசண்முகம்

திரு. ஆர்.பாலசந்திரன்

# நன்கொடை வேண்டுதல்

## சென்னை கொங்கு குடும்பவிழா மற்றும் விளையாட்டு விழா - 2024

நமது கொங்கு சொந்தங்கள் சங்கமிக்கும் இந்த மாபெரும் திருவிழாவாம் நமது உறவுகள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சென்னை கொங்கு விளையாட்டு விழாவையும், குடும்பவிழாவையும், சுமார் 5000 உறுப்பினர்களும், 18 ஆயிரம் சொந்தங்களும் இணையத்தளத்தின் வாயிலாக கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

ஆகையால் சொந்தங்களும் நண்பர்களும் நன்கொடை வேண்டுதல் பார்த்து தங்களது நிறுவனத்தின் விளம்பரத்தை பக்கவாட்டில் இருக்கும் படிவத்தில் விளம்பரத்தொகையைத் தேர்ந்தெடுத்து சமுதாயக்கடமையை ஆற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இந்த வருடமும் தங்களுடைய நிறுவன விளம்பரங்களை தந்து நிதி வழங்கியும் ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சொந்தங்கள் அனைவரும் வருகின்ற 28–07–2024 தேதிக்குள் தங்களது நிறுவனத்தின் விளம்பரச்செய்தியையும், நன்கொடையையும் சங்கத்தின் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க நன்றி

குறிப்பு : NEFT (or) RTGS முறையில் அனுப்ப கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் NEFT (or) RTGS விவரங்களை சங்கத்திற்கு உங்கள் நிறுவனத்தின் பெயரோடு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**Bank Details :-**

| | | |
|---|---|---|
| NAME | : | KONGU NANBARGAL SANGAM |
| BANK | : | Punjab National Bank |
| BRANCH | : | KODAMBAKKAM |
| A/C NO | : | 10852011000060. |
| IFSC | : | PUNB0108510 |

மலர்குழுவினர் மற்றும் விழாக்குழுவினர்

chennaikongu@gmail.com
www.youtube.com/@sivad3494
www.chennaikongunanbargalsangam
63839 85919

# குடும்ப விழாச் சிறப்பு மலர் 2024

பெறுநர்
**குடும்ப விழா மலர்க்குழு**
**கொங்கு நண்பர்கள் சங்கம்,**
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Ph : 044-43510460, Cell : 63839 85919
Email : chennaikongu@gmail.com

அன்புடையீர், வணக்கம்

குறிப்பிட்டுள்ள விளம்பர விவரத்தை 2024 ஆம் ஆண்டுக் குடும்ப விழாச் சிறப்பு மலரில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். விளம்பர விவரத்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

Advt. Size : 210x150 mm

| | | | |
|---|---|---|---|
| பின்பக்கம் | (வண்ணத்தில்) | ரூ.1,25,000 | ☐ |
| முன் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.1,00,000 | ☐ |
| பின் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.1,00,000 | ☐ |
| முழுப் பக்கம் ஆர்ட் பேப்பர் | (வண்ணத்தில்) | ரூ.25,000 | ☐ |
| முழுப் பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.10,000 | ☐ |
| அரைப் பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.5,000 | ☐ |
| Stall | (Size 3x5) | ரூ.5,000 | ☐ |

Advertisement Format PDF (or) JPEG

விளம்பரச்செய்தி : விளம்பரத்திற்குண்டான தொகை ரூ. ..........................................ஆன காசோலை / வரைவோலை எண்................................ தேதி...................... வங்கியில் எடுத்து இத்துடன் இணைத்துள்ளோம்.

## அனுப்புநர்

NAME :

Address :

Cell :
Email ID :

குறிப்பு : NEFT (or) RTGS முறையில் அனுப்ப கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் NEFT (or) RTGS விவரங்களை சங்கத்திற்கு உங்கள் நிறுவனத்தின் பெயரோடு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**Bank Details :-**
NAME : KONGU NANBARGAL SANGAM
BANK : Punjab National Bank
BRANCH : KODAMBAKKAM
A/C NO : 10852011000060.
IFSC : PUNB0108510

தங்களுடைய நிறுவனத்தின் விளம்பரச்செய்தியை இந்தப் படிவத்துடன் இணைக்கவும்.
மேலும் மின்னஞ்சல் chennaikongu@gmail.com வழியாகவும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

..................................................
கையொப்பம்

* 80 G Exemption available

# 2024 ஆம் ஆண்டுக்கான

- **‘கொங்கு சாதனையாளர்’ விருது,**
- **‘வெளிநாடு கொங்கு சாதனையாளர்’ விருது,**
- **‘கொங்கு பெண் சாதனையாளர்’ விருது,**
- **‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது,**
- **‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது,**







நமது சங்கத்தின் சார்பில் சென்னையில் இந்த ஆண்டு நடைபெற உள்ள குடும்பவிழாவில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பெருமை தேடித் தந்துள்ள சாதனையாளர்களுக்கு “கொங்கு சாதனையாளர்” விருதும், வெளிநாடு சென்று சாதனை படைத்துள்ளவர்கட்கு “வெளிநாடு கொங்கு சாதனையாளர்” விருதும், நமது சமுதாய மகளிர் அவர்களது துறையில் சாதனை புரிந்தமைக்கான “கொங்கு பெண் சாதனையாளர்” விருதும், வேளாண்மையில் சாதனை படைத்துள்ளவர்கட்கு “கொங்கு வேளாண் சாதனையாளர்” விருதும், தேர்வுகளில் போற்றிப் பாராட்டத்தக்க வகையில் சாதனை படைத்துள்ள மாணவ, மாணவிகளுக்கு “கொங்கு இளம் சாதனையாளர்” விருதும் வழங்கப்பட உள்ளன.

இந்த ஆண்டு குடும்ப விழா 28–07–2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மிகச்சிறப்பாக பார்போற்றும் வண்ணம் நடைபெற உள்ளது. 2024 ஆம் ஆண்டிற்கான மேற்கண்ட விருதுகளை வழங்குவதற்குப் பரிசீலனை செய்திட, தங்களுக்குத் தெரிந்த, தங்கள் பகுதியைச் சார்ந்த தகுதிவாய்ந்த சாதனையாளர்களின் விவரங்களைப் புகைப்படத்துடன் சங்க அலுவலகத்திற்கு ஜூன் 1–ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

- சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# வாழ்த்துகிறோம்








விஸ்வநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்
நிர்வாக இயக்குனருமான
**திரு. கே.விஸ்வநாதன்**
அவர்களை
அகில இந்திய கட்டுநர்
வல்லுனர் சங்கத்தின்
தேசிய தலைவராக
தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு
சென்னை கொங்கு நண்பர்கள்
சங்கத்தின் சார்பாக
வாழ்த்துகிறோம்.

# வருந்துகிறோம்



நமது சென்னைகொங்கு நண்பர்கள் சங்கத்தின் துணைத்தலைவரும், செங்கம் டிரான்ஸ்போர்ட் உரிமையாளருமான வி.பி.வீரப்பன் அவர்களின் மாமியாரும், திருமதி பி.லீலா, பி.மனோகரன், நமது சங்கத்தின் உறுப்பினர்கள் திரு.பி.தியாகராஜன் மற்றும் பி.சரவணன், ராஜம் டிரான்ஸ்போர்ட், நாமக்கல், அவர்களின் தாயாருமான திருமதி பி.இராஜம்மாள், 96 வயது அவர்கள் 23-04-2024 அன்று இயற்கை எய்தினார். வி.பி.வீரப்பன் அன்னாரது குடும்பத்தாருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இறங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

# வருந்துகிறோம்



சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னாள் மூத்த செயற்குழு உறுப்பினர் திருமதி சாரதா சின்னசாமி அவர்களின் கணவரும், மூத்த வழக்கறிஞர் திரு.சி.சின்னசாமி அவர்கள் 07-05-2024 அன்று இயற்கை மரணம் அடைந்தார். நமது சங்கத்தின் சார்பாக சக்தி பல் மருத்துமவனை உரிமையாளரும் அவருடைய மகனுமான டாக்டர் சி.செல்வமுத்துகுமார், அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இறங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# வையம் தகழியாய்

வையம் தகழியாய்
வார்கடலே நெய்யாக
வெய்யக் கதிரோன் சுடரென
உருவகித்தார் பொய்கையார்.

மாரியும், பருவ வளியும்
கதிரின் வடதென் பயணமும்
செம்மையாய் இருந்த நாளில்
செழித்ததே மண்பதை!

பகலவனே !
ருத்ரனாய் நாளும் கனலை
கக்கும் காரண மென்?

மாந்தரின் பேரவா நிகழ்த்தும்
வளிமாசும், நீர்மாசும் நடுதலின்றி
வனமழிக்கும் பான்மையும் உன்னை
ரௌத்திரம் பழக தூண்டியதோ?

மலையெலாம் உயர்தருக்கள்
குன்றெலாம் குறுவனங்கள்
மண்மகள் பசுமை பூண தணியுமோ
உன்கோபக் கனல்?

பரவும் பசுமை கனல் நீக்க
தணியும் மாசால் வளி சிறக்க
ஓசோன் கூரையும் சீர்படுமே!
காய்கதிர் செல்வ! சினம் தணிந்து
அன்பே சிவமென அருள்வாயே!

"வாழி நலம் சூழ!"
- கலாப்ரியன்
கொங்குபூபதி





# கடவுளே!


நீயும் நானும் வேறில்லையா
நீயேதான் நானா
நான்தான் நீயா
அழகென்றால் நீயா
அழுக்கென்றால் நானா
நிறையென்றால் நீயா
குறையென்றால் நானா
அழுக்கழித்த கடவுள் மனிதனா
இழுக்கில்லா மனிதன் கடவுளா
அழுக்கொழிந்த நான் நீயா
இழுக்கிழந்த நான் நீயா
அழுக்கும் இழுக்குமே வேறுபாடா
இழுக்கொழிந்து அழகாகும் நாள் வருமா!!
கடவுள் யார் கடவுளே!?
கருணையுள்ளோர் கடவுளே
கள்ளம் கழித்தவரெல்லாம் கடவுளே!

- செ.அசோகன்



முதல் சுதந்திரப்போராட்ட வீரர்
**மாவீரன் தீரன் சின்னமலை கவுண்டரின்**
269 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா

**தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவர், செயலாளர், முன்னாள் செயலாளர் பேரவைத்தலைவர் மற்றும் நம் கொங்கு சொந்தங்களோடு இணைந்து சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்தி இவ்விழாவை சிறப்பித்தனர்.**



# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

***சங்கத்தின் உறுப்பினர்களுக்கு விலாசம் மாற்றம் வேண்டுகோள் ! கவனத்திற்கு***

அன்புடையீர்,

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்கு! மாதந்தோறும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திலிருந்து மாத மலர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் சுமார் 400 புத்தகங்கள் விலாசம் மற்றும் அலைபேசி எண். தவறாக இருப்பதாலும், சங்கத்திற்கு திரும்ப வந்துவிடுகிறது. ஆகையால் உறுப்பினர்கள் இந்த படிவத்தில் உறுப்பினரின் சரியான உறுப்பினர்எண், விலாசம், மின்னஞ்சல், அலைபேசி எண் ஆகியவற்றை பூர்த்தி செய்து சங்கத்திற்கு அனுப்பு வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினராக விரும்பும் சொந்தங்கள் கொங்குநண்பர்கள் சங்கத்தின் www.kongunanbargalsangam.com இணையதளத்தில் Membership Form Download செய்து தங்களுக்கு தெரிந்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று சங்க விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதற்குண்டான தொகை காசோலையாகவோ, பணமாகவோ படிவத்தில் உள்ள வங்கிகணக்கிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## விலாசம் மாற்றம்

| **Old Address :** | **New Address :** |
|---|---|
| Membership No. | Membership No. |
| Name | Name |
| Address | Address |
| Cell | Cell |
| Mail ID | Mail ID |

**மலர் பெறாதவருக்கு :**

தாங்கள் விலாசம் மாற்றம் செய்திருந்தாலும், தொலைபேசி எண். மற்றும் மின்னஞ்சல் மாற்றம் செய்திருந்தாலும், இந்த படிவத்தின் மூலமாக பூர்த்தி செய்து சங்கத்தின் அலுவலகத்திற்கு பதிவேற்றத்தில் சேர்த்து புதுப்பிக்க கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் காலமாண உறுப்பினர் அவருடைய வாரிசுதாரர்கள் உறுப்பினர் எண்ணையும், தொலைபேசி எண், மின்னஞ்சல் போன்வற்றை சங்கத்திற்கு தெரியப்படுத்தவும்

**பெறுநர்,**

"வெள்ளி விழா இல்லம்" 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன் : 044–4351 0460, 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

பதிவு எண். : 282/76

அலுவலகம் : "வெள்ளிவிழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
: 044-43510460, 63839 85919

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 14.
044-43510460, 63839 85919

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 14.
044-4266 8046, 93815 45451

www.kongunanbargalsangam.com, e-mail : chennaikongu@gmail.com

## ஆயுள் உறுப்பினர் விண்ணப்பம்

| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் |
|---|
| உ.எண் |

புகைப்படம்

பெயர் :

பிறந்த தேதி : வயது :

தகப்பனார் பெயர் :

படிப்பு :

தொழில் :

சொந்த ஊர் :

மாவட்டம் :

ஜாதி :

கூட்டம் / குலம் :

குலக் கோயில் :

முகவரி (வீடு) :

முகவரி (அலுவலகம்) :

இரத்த வகை (B.Group):

மின்னஞ்சல் (email):

அலைபேசி எண்:

தொலைபேசி எண் (வீடு):

தொலைபேசி எண் (அலுவலகம்):

திருமணம் ஆனவரா ?: ஆம் / இல்லை

குடும்பத்தினர் விவரம்

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மை என உறுதி அளிக்கிறேன்.

மேற்படி சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக என்னைச் சேர்த்துக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான சந்தாத் தொகை ரூ. இத்துடன் காசோலை / வரைவோலை (Cheque / DD / RTGS in the Name of "Kongu Nanbargal Sangam" இணைத்துள்ளேன்.

காசோலை / வரைவோலை எண் : தேதி : வங்கி :

ஆயுள் சந்தா விபரம் :

ஆயுள் சந்தா ரூ. 10000/-

ஆயுள் சந்தாவுடன் கட்டிட நிதி ரூபாய் 1000/– செலுத்த வேண்டும்.

உறுப்பினர் படிவத்துடன் ஆதார் அட்டை மற்றும் ஜாதி சான்றிதழ் இணைக்கவேண்டும்.

அறிமுகம் செய்த, சென்னை கொங்கு
நண்பர்கள் சங்க செயற்குழு உறுப்பினர் எண். :

உறுப்பினர் பெயர் :

கையொப்பம் :

உறுப்பினர் ரசீது எண் மற்றும் தேதி :

செயற்குழு ஒப்புதல் நாள் :

**<u>Bank Details</u>**

| | | |
|---|---|---|
| Bank | : | Canara Bank |
| Name | : | Kongu Nanbargal Sangam |
| Account No. | : | 0938101014948 |
| Branch | : | Royapettah |
| IFSC | : | CNRB0000938 |

இடம் :
தேதி :

விண்ணப்பதாரர் கையொப்பம்

தலைவர் / செயலாளர்

## என்றும் நலமுடன் வாழ...

பத்மஸ்ரீ கொங்குமாமணி டாக்டர் வி.எஸ். நடராஜன்
முதியோர் நல மருத்துவர் சென்னை

# கோடைக் காலத்தை குளிர்ச்சியாக்க



இவ்வாண்டு வெயிலின் தாக்கம் மிக மிக அதிகமாக இருக்கும். அதாவது கோடைக்காலத்தில் வழக்கமாக இருக்கும் வெயிலை விட சுமார் 3 டிகிரிக்கு மேல் இருக்கும் என்று கூறுகிறார்கள், பொதுவாக முதியோர்களை அதிகம் பாதிப்பது குளிர்காலத்தில் தான், ஆனால் தற்பொழுது வெயிலின் தாக்கம் அதிகரிப்பதால் முதியோர்களும் இக்காலத்தில் பல தொல்லைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

கோடைக்காலம் தொடங்கிவிட்டது. வெயில் கொடுமை ஆரம்பித்துவிட்டது. இச்சமயத்தில் உடலுக்கு என்னென்ன தொல்லைகள் ஏற்படும், இதை எப்படிச் சமாளிப்பது ? அதைப்பற்றி சற்று விவரமாகப் பார்ப்போம்.

### கோடைக்காலத் தொல்லைகள்

அதிக வியர்வையினால், உடலிலுள்ள உப்பு மற்றும் நீர் அதிகமாக உடலில் இருந்து வெளியேறுவதனால் உடல் மிகவும் பலவீனம் அடையும். இலேசாக களைப்பு, பயக்கம், தலைவலி, குமட்டல் போன்ற தொல்லைகள் தோன்றும். நாக்கு வறட்சி அடையும். சிறுநீர் செல்வது குறையும். நிக் கடுப்பம் சிலருக்கு உண்டாகும். உடலில் போதிய தண்ணீர் இல்லாததனால் மலச்சிக்கல் ஏற்படும். இரவில் தூக்கம் சரியாக இருக்காது.

### தோல் சார்ந்த தொல்லைகள்

சூரிய ஒளியில் உள்ள யு.வி (ருடவசய எடைடநவ சயல) கதிர்கள் தோல் மேல் தொடர்ந்து படும் பொழுது தோல் நிறம் சிவக்கும், தோல் அரிக்கும் அல்லது தடிந்துப்போகும். அதிகமாக வியர்த்துக் கொட்டும். அதனால் உடலில் அரிப்பு தோன்றும். சில சமயங்களில் வியர்வையில் நாற்றம் இருக்கும். முதுகு மற்றும் பல உடற்பாகங்களில் வியர்க்குரு தோன்றும்.

உடலின் பல பகுதிகளில் வேனல் கட்டிகள் எனப்படும் சிறு, சிறு கொப்புளங்கள் தோன்றும். முக்கியமாக நிரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இவை அதிகம் வாய்ப்புண்டு. முகத்தில் உள்ள முகப்பரு அதிகரிக்க வாய்ப்புண்டு.

தோல் வனப்பு குறைந்து, கருக்கம் ஏற்படும். உடலில் பூஞ்சைக் காளான் நோய்த் தொற்று ஏற்படலாம். அது அக்குள் மற்றும் இடுப்புப் பகுதியில் அதிகமாகத் தோன்றும்.

### வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க

- ❖ முடிந்தவரை, அதிகமாக வெயில் இருக்கும் சமயத்தில் வெளியே செல்வதைத் தவிர்க்கலாம்.

- ❖ வெளியே போவதற்கு முன்பு தண்ணீர், சிறிது உப்பு கலந்த மோர் அல்லது பழரசம் அருந்துவது நல்லது.
- ❖ வெளியே போகும் பொழுது அவசியம் குடை எடுத்துச் செல்லவும்.
- ❖ தலையில் ஏற்படும் சூட்டைத் தணிக்க தலையில் தொப்பி அணியலாம்
- ❖ குறைந்தது 2 – 3 லிட்டர் தண்ணீர் அல்லது வேறு ஏதாவது திரவமோ ஒரு நாளைக்குத் தேவைப்படும். இதய நோய் அல்லது சிறுநீரக நோய் உள்ளவர்கள் டாக்டரின் ஆலோசனைப்படி தேவையான நீரை அருந்தலாம். தண்ணீர் தாகம் ஏடுக்கும் பொழுது, உடலில் உள்ள செல்கள் எல்லாம் வறட்சி நிலையை அடைத்து விடுகிறது. அதனால் தான் உடல் சோர்வும், மயக்கமும் வருகிறது. தாகம் வருவதற்கு முன்பே அடிக்கடி தண்ணீர் அருந்திக்கொண்டால் நீர் வறட்சி ஏற்படாமல், உடல் களைப்பும் ஏற்படாமல் இருக்க முடியும்.
- ❖ முதியவர்களுக்கு வெயில் அதிகம் இருந்தாலும், தாகம் அவ்வனவாக எடுக்காது. ஆகையால் போதிய தண்ணி குடிக்க மாட்டார்கள். வீட்டில் உள்ளவர்கள் முதியவர்களை போதிய தண்ணீரைக் குடிக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ தர்பூசணி, இளநீர், ஆரஞ்சு போன்ற பழரசங்களை அதிகமாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ கோடைக்கேற்ற பழம் நுங்கு
- ❖ நன்னாரி சர்பத் உடலுக்கு குளிர்ச்சியை தரும்பு பதளிர் கோடையிர் உடலுக்கு மிகவும் நல்லது.
- ❖ மசாலா அதிகம் உள்ள உணவை தவிர்க்கலாம் அல்லது குறைக்கலாம். உதாரணம் அசைவ உணவு
- ❖ கஞ்சி – கம்பு திணை ஆகியவற்றில் செய்த கஞ்சி, உடல் சூட்டைக் குறைக்க வல்லது. எளிதில் செரிக்கவல்லது.
- ❖ செயற்கைப் பானங்களை முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.
- ❖ கண்கள் மிகவும் ஆடாக இருந்தால் வெள்ளரிக்காயை நறுக்கி கண்கள் ணேஸ் சிறிது நேரம் வைத்தால், கண் சூடு குறையும்.
- ❖ காற்றோற்றமுள்ள அறையில் முடிந்தவரை இருந்தால் நல்லது.
- ❖ மின் விசிறி, ஏர்க்கூலர் குவிச் சாதனைப் பெட்டி ஆகிய உபகரணங்களைத் தேவைக்கேற்ப உபயோகிக்கலாம்
- ❖ படுக்கை அறையில் வெட்டிவேர்க் கொடியைத் தண்ணீரில் நனைத்துத் தொங்கவிட்டால் அறை குளிர்ச்சியாக இருக்கும்.
- ❖ வேர்க்குரு அதிகம் இருந்தால் கேலமைன் கிரீமை உடலுக்குத் தடவலாம்.
- ❖ லேசான பருத்தியிலான அல்லது அதர் ஆடைகளை அணிவது நல்லது.
- ❖ காலையிலும், இரவிலும் குளித்தால் உடல் சூடு குறையும்.
- ❖ கண்ணிற்குக் குளிர்ச்சி தரும் கண்ணாடியை உபயோகப்படுத்தலாம்.
- ❖ அரிப்பு அதிகமாக இருப்பின், டாக்டரை கலந்து அதற்குத் தேவையானமாத்திரைகளைச் சாப்பிடலாம்.
- ❖ ஆகவே கோடையில் குளிர்ச்சி பெற தண்ணீர், மோர், பழரசம், பதநீர், நுங்கு, கஞ்சி போன்றவைகளை தினமும் சேர்ந்துக்கொண்டு, லேசான பருத்தி ஆடை அணிந்து, தினமும் இருமுறை குளித்து வந்தால் போதும், நாம் இருக்கும் இடத்திலேயே ஊட்டியின் குளிர்ச்சியை ஓரளவிற்கு அனுபவமிக்க முடியும்.

■






# நல்லதம்பிக் காங்கேயன்

மோரூர் காங்கேய சிற்றரசர்களில் மிகச்சிறப்பாக போற்றப்படுபவர்களில் இவரும் ஒருவே, இவருக்கு அத்தப்ப நல்லாம்பிக் காங்கேயன், மற்றும் ஆகவராமன் என்ற சிறப்புப் பெயர்கள் உண்டு. இவர் 16 ஆம் நூற்றாண்டுஇறுதியலும் 17 ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலும் ஆட்சியில் இருந்தார். இவர் சிறந்த நீதிமான் மற்றும் பக்திமான் ஆவார். மோரூர் அருள்மிகு பாம்பலங்காரர் கோயிலை விரிவாக்கி திருப்பணிகள் செய்தார். அதற்கான கல்வெட்டு சான்றாக அங்கு உள்ளது.

இவருடைய காலகட்டத்தில் கொங்கு நாட்டில் மதுரை நாயக்கர் அரசர்களால் நிறைய கோயில் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. குறிப்பாக திண்டுக்கல் தாடிக் கொம்பு, தாரமங்கலம், கோவை பேரூர் கோயில்கள் என்று குறிப்பாக சொல்லலாம். கி.பி. 1599 ஆம் ஆண்டு அந்தப்ப நல்லதம்பிக் காங்கேயனும் தனது பங்கிற்கு திருச்செங்கோடு மலை அருள்மிகு அர்த்தநாரி ஈசுவார் கோயிலுக்கு நிருத்த மண்டபம் கலை நயத்தோடு செய்ய விருப்பப்பட்டு மதுரை சென்று ஸ்தபதிகளை சந்தித்து தனது விருப்பத்தை கூறினர். அவர்களும் இந்த அரசனிடம் அந்தஅளவிற்கு பொன்னும் பொருளும் இருக்குமா? என்று சந்தேகப்பட்டு தற்போது மழைக்காலம் வரப்போகிறது இப்போது வந்தால் சமையல் பண்ணுவதற்கு விறகுகள் கிடைக்காது எனவே ஆறுமாதங்கள் கழித்து வருகிறோம் என்று சொன்னதும் அதற்கு நல்லதம்பி காங்கேயனும் ஒருவாரம் கழித்து வருகின்றேன் என்று கிளம்பினான்.

மதுரை கோட்டையில் தங்கள் பங்கிற்கு காவல் இருந்த 72வது படைவீரர்களை அழைத்துக் கொண்டு மதுரை நகரைச் சுற்றியுள்ள விறகு கடைகளில் சந்தனக்கட்டைகளை சேகரித்து வண்டிகளில் ஏற்றி ஸ்தபதிகள் தங்கியிருக்கும் குடியிருப்புகளை நோக்கி சென்று அவர்கள் முன்பு வண்டிகளை நிறுத்தி இப்போது கோயில் திருப்பணி செய்வதற்கு போகலாமா? என்று வினவினான். இதைப்பார்த்த ஸ்பதிகள் இவனது செல்வாக்கை கண்டு வயந்து உடனே 40 ஸ்பதிகள் குடும்பத்துடன் திருச்செங்கோடு நகரத்திற்கு அவனுடன் புறப்பட்டு சென்றனர்.

இவர் திருச்செங்கோடு நகரத்தின் மையத்தில் இருக்கும் அருள்மிகு கைலாசநாதர்

கோயிலுக்குள் அம்மன் சன்னதியை கட்டியும் பல திருப்பணிகளை அங்கும் செய்தார். எனவே இவரது பெயரைக் கொண்டு இக்கோயில் அக்காலத்தில் 'நல்லதம்பிரான் கோயில்' என்றழைக்கப்பட்டு காலப்போகில் பெயர் மருவி தற்போது 'நிலத்தம்பிரான் கோயில்' என்றழைக்கப்படுகின்றது.

பெரும்பாலான மோரூர் காங்கேய அரசர்கள் தமிழ் புலவர்களை பெரிதும் ஆதரித்தும் அரவணைத்து அவர்கள் துணைகொண்டு இவர்களில் பலர் புலவர்களையும் இருந்துள்ளனர். தமிழகத்தில் இவர்களுக்கு தமிழ் இலக்கியத்தில் உள்ள ஈடுபாடுவேறு எந்த சிற்றரசர் வம்சத்தாருக்கு இல்லையெனால். அந்த அளவிற்கு தமிழ்ப்புலமையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். அந்த வகையில் இவர் சங்ககிரி எம்பெருமான் கவிராயர் என்பவரின் ஆத்மநண்பராக இருந்தார். இவருடைய ஊக்குவிப்பு, நட்பு, மற்றும் அன்பின் அடையாளமாக எம்பெருமான் கவிராயர் தக்கை இரமாயணம் என்றும் என்னும் நூலை இயற்றினார்.

## எம்பெருமான் கவிராயர் (கி.பி.1575 க்குப்பின் 1650 க்குமுன்)

எம்பெருமான் கவிராயர் சங்ககிரியைச் சேர்ந்தவர். "பக்தர் பாடி எம்பெருமான் கவிராயர்" என்றும் அழைக்கப்பட்டார். யாதவ குலத்தைச் சேர்ந்த இவர் மதுரை நாயக்கர் அவரசரின் கீழ் சங்ககிரி நகருக்கு அதிகாரியாக இருந்தார். பின்னர் பதவி உயர்வு பெற்று மதுரைக்கு மாற்றப்பட்டார். அங்குஅழகர் கோயிலைச் சேர்ந்த பூங்கோதை என்பவரை திருமணம் செய்து கொண்டு சிலகாலம் மதுரையில் இருந்து விட்டு முத்துவீரப்ப நாயக்கன் காலத்தில் (கி.பி.1609/23) காலத்தில் தம்முடைய சொந்த ஊரான சங்ககிரிக்கு திரும்பினார். அரசியல் வாழ்வைத் துறந்து நம்மாழ்வார், இராமானுஜர், மணவாள முனிவர்கள் வளர்த்த வைணவ தர்மத்தில் பரம பாகவதராய் வாழ்ந்தார். இராமபிரானின் குணங்கள், அரிய வீரச்செயல்களால் இவர் ஈர்க்கப்பட்டு மனிதனுக்கு இருக்கும் பந்தத்தை கடந்து ராமனிடம் பேரன்பும், பக்தியும் கொண்ட இவர் தமக்கே உரிய பாணியில் தக்கை என்னும் (உடுக்கை போன்றது) இசைக் கருவியைக் கொண்டு அதன் தாளத்திற்கேற்ப கம்பராமாயணக் கவிதைகளை இசையாக பாடி கதாகாலட்சேபம் செய்து வந்தார்.

இவரது நண்பரான மோரூர் நல்லதம்பி காங்கேயன் இவர் பாடும் கம்பராமாயண பாடலைகேட்டு இதை முழுமையாக பாடும்படி கவிராயனார்வேண்டினார். இவரும் அவரது வேண்டு கோளை ஏற்று கம்பராமாயணத்தை கற்பனைவளம், கட்டுகோப்பு பாத்திரங்களின் பண்பு, நாடகபாவம் குறையாவண்ணம் 'உலக மாதர்' என்ற மங்கல மொழியை முதன்மையாகக் கொண்டு ஒற்றை, இரட்டை வரிப்பாட்டுகளில் ஆறு காண்டங்களையும் 3250 இசைப்பாடலாக பாடி அரங்கேற்றினார்.

எப்படி கம்பர் ராமாயண காவியத்தை திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலில் அரங்கேற்றினாரோ அதேபோல் சங்ககிரி மலை அடிவாரம் அருள்மிகு வரதராஜபெருமாள் கோயிலில் தக்கை இராமாயணம் அரங்கேறியது. அப்போது சங்ககிரி "மேற்கு ஸ்ரீரங்கம் என்றழைக்கப்பட்டது. இதற்கான சான்று மைசூரு உடையார் காலத்தில் வெளியிடப்பட்ட சங்ககிரி தாமிபர சாசனத்தில் 64வது சுலோகத்தில் காணப்படுகிறது. கம்பர் தனது காவியத்தில் தமக்கு உதவி செய்த கடையப்ப வள்ளலை பாடல்களில் ஆங்காங்கே குறிப்பிடுவர். இதேபோல் எம்பெருமான் கவிராயரும் தக்கை இராமாயணத்தில் தனக்கு உதவிய நல்லதம்பி காங்கேயனைப்பற்றி குறிப்பிடுகின்றனார்.

அவனும் சடையன் காராளன்
அவன் தன் ஊரும் வெண்ணெய் நல்லூர்
இவனும் நல்லதம்பிக் காங்கேயன்

இவன்தன் ஊரும் மோரூராம்
அவனும் கண்ணன் சரராமன்
ஆகவே ராமன் இவனும் கண்ணன்
இவனும் அவனைப்போல் உலகுதனில்

இராம கதை தனைப் பாடுவித்தான் - பாடல் 25 தக்கை இராமாயணம்

எம்பெருமான் கவிராயரின் துணைவியார் பூங்கோதையார் என்பவர் தமிழ் இலக்கிய இலக்கணமும், வடமொழிப் பயிற்சியும் கொண்டவர், இவர் தாரமங்கலம் கட்டி முதலியார் மனைவி சின்னம்மாளுடன் சேர்ந்து "கண்ணொயி கதிரொளி" என்ற அத்வைத நூலை இயற்றினார். மேலும் திருச்செங்கோடு குறவஞ்சி என்ற நூலையும் இயற்றினார். ஔவையார், காரைக்கால் அம்மையாருக்குப்பின் தமிழகத்தில் பிரபந்த இலக்கியம் படைத்த ஒரே பெண் புலவர் இவரே.

## தக்கை இராமாயணம் :

பூர்த்தியான ஏடுகள் 157, குறைசுவடிகள் 39, ஒவ்வொரு சுவடியும் 9 வரிகள் கொண்டது. தக்கை என்ற இசைக் கருவி கொங்குநாட்டில் சமீப காலம் வரை மக்களின் சுப காரியங்களில் பயன்பாட்டில் இருந்தது. நடராஜர் என்பது புராணம், வீரம், அவலம், அச்சம், ஆவேசம் ஆகிய உணர்வுகளை வெளிப்படுத்த உடுக்கை, தக்கை போன்ற இசைக் கருவிகள் உதவுகின்றன. கொங்கு நாட்டில் நாட்டார் பாடல்களில் தக்கை இசை பயன்பட்டிருக்கின்றது. இவ்வகைப்பாடல்கள் இசை நுவர்மரபில் இயன்ற செய்யுள் என்பர். திருச்செங்கோடு பள்ளு, குருச்சேத்திர நாடகம், கபிலகதை, பனையெழுபது, அர்ச்சுனன் தபசு போன்ற சிற்றிலக்கியங்களில் இத்தகைய தக்கை இசைப் பாடல்களை காணலாம். தக்கை இராமாயணத்தை சுருக்கமாக இசைத் தமிழ் காப்பியம் எனலாம். கூத்தாடுவது போன்ற பாணியில் இசையில் ராமாயணத்தை மக்களுக்கு தெரியப்படுத்துவது ஆகும். தமிழகத்தில் இன்றளவும், இராமாயண, மகாபாரதக் கதைகள் பெரும்பாலும் தெருக்கூத்து மூலமாக பாடல்கள் பாடி கதை சொல்வது நடைமுறையில் இருந்து வருகின்றது.

கொங்கு நாட்டில் பாயும் நதிகளை தக்கை இராமாயணத்தில் கீழ்க்கண்டவாறு பாடல் உள்ளது.

"ஆன் பொருந்தும் நங்காஞ்சி அலகுமுறியாறு

தொப்பையாறு வானி
மீன்பொருந்தும் காவேரி திருமணமுத்
தாநதி சூழ் மேருவாமால்"

இவை காவிரி, அமராவதி, பவானி, நொய்யல், துருமேணிமுத்தாறு சரபங்கா, தொப்பையாறு ஆகியனவாம், இந்த ஏழுநதிகள் பாயும் பகுதிகளில் உள்ள நாடுகள் ஏழுகரை நாடுகள் என புகழ்பெற்றனர்.

கம்பராமாயணத்தில் சீதையைத் தேடி தென்திசை சென்ற இராமன் மற்றும் அனுமான் சேர, சோழ, பாண்டிய , தொண்டை மண்டலத்தைக்கடந்து மகேந்திர கிரியை அடைந்தனர் என்று பாடுவார் இதையே தக்கை இராமாயணத்தில் ஏழுகரை நாடெங்கும் கொங்குமலைகளில் தேடினர் என்று பாடுகின்றனர்.

"கூர்ந்த கொங்கு ஏழ்கரைநாட்டில்
கொல்லிமலை சேரன் மலை
சேர்ந்த கஞ்சமலை அலைவாய்
திருவாரை செங்கோடு
வளர்த்த சங்ககிரி பாலை
மலை வேதகிரி முதலாய்"

நன்றி : T.K.இராஜேஸ்வரன் B.A.,B.L.,

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 94 | M.சிவசங்கர் | காடை | 13-09-1993<br>ஆயில்யம் | B.E., | IT (Private) | சேலம்<br>12.25 pm | 97877 14999<br>94434 57406 |
| 95 | P.அபிராமி | பவள | 22-09-1999<br>அவிட்டம் | B.Tech.,<br>(Chemical Eng) | Process Engineer | சென்னை<br>12.25 pm | 96001 31940 |
| 96 | S.ஹரித்தா | மணியன் | 05-09-1999<br>புனர்பூசம் | BDS., (MDS) | Doctor | நாமக்கல்<br>02.50 pm | 99622 42030<br>97899 76537 |
| 97 | M.சுபிக்ஷா | அந்துவன் | 12-03-1997<br>அஸ்வினி | M.Sc., (TCS)<br>Integrated Course | Goldman, Bangalore | கோவை<br>06.02 am | 97890 44666<br>94444 03797 |
| 98 | S.இலக்கியா | காரைகூட்டம் | 28-09-1996<br>ரேவதி | M.E., Civil | M.MOSER<br>Project Engineer | சேலம்<br>12.15 pm | 94431 54795 |
| 99 | M.ஷாலினி | பிள்ளன் | 01-07-1998<br>அஸ்தம் | B.E., MBA., | IT<br>(CTS, Chennai) | கோவை<br>07.12 pm | 94452 11219<br>93847 63267 |
| 100 | திவ்ய சினேகா | செம்பூந்தன் | 17-03-2000<br>ஆயில்யம் | B.A., MBA., | IT<br>Chennai | திருப்பூர்<br>12.32 pm | 75985 19102<br>80566 78787 |
| | | | **மணமகள் தேவை** | | | | |
| 86 | A.செந்தில்குமார் | செங்கன்னி | 17-06-1996<br>திருவாதிரை | B.E., MS<br>Singapore | Self Business | கரூர்<br>07.05 pm | 98436 76333 |
| 87 | S.அபிலாஷ் | வெண்டுவன் | 11-07-1993<br>ரேவதி | MBBS., MD | Doctor | சவுதிஅரேபியா<br>10.40 pm | 95000 01740<br>90031 77196 |
| 88 | A.ஆதவன் | பயிரன் | 31-05-1997<br>உத்திரட்டாதி | B.Tech., (Mech) | Business Assistant<br>Management | கோவை<br>04.46 pm | 90470 26711 |

# மணமகள் தேவை




| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர்/உயரம் | : | E.குமரவேலு |
| பிறந்த தேதி | : | 27-06-1997 |
| பிறந்த நேரம், இடம் | : | 12:55 am, சேலம் |
| நட்சத்திரம் / இராசி | : | பூரட்டாதி 4 / மீனம் |
| தந்தை பெயர் | : | திரு. C.ஈஸ்வரமூர்த்தி |
| தாயார் பெயர் | : | திருமதி E.வனிதா |
| குலம் | : | காரி |
| உடன் பிறந்தோர் | : | ஒரு தம்பி |
| உயரம் | : | 171 cm |
| படிப்பு | : | B.E.,(Civil) |
| தொழில் | : | Civil Engineer (Business - Flour / Oil Mill) |
| மாத வருமானம் | : | Rs.50,000/- per month |
| சொத்து மதிப்பு | : | நேரில் |
| உகந்த மணமகள் | : | நல்ல குடும்பம் / Degree |
| ஜாதக குறிப்பு | : | 7 ல் செவ்வாய் |
| தொடர்புக்கு | : | 80124 44042, 94426 86191 |

| | | | |
|---|---|---|---|
| 1–லக்<br>சந்<br>சனி | | மாந் | புத<br>சூரி |
| கேது | இராசி | | சுக் |
| குரு(வ) | | | ராகு |
| | | மாந் | செவ் |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | கேது |
| சனி<br>1–லக் | நவாம்சம் | | சந் |
| சூரி<br>புத<br>மாந் | | | சுக் |
| ராகு | | | குரு(வ) |

# மணமகள் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர்/உயரம் | : | அபிஷேக் செந்தில்குமார் |
| பிறந்த தேதி | : | 17-06-1996 |
| பிறந்த நேரம், இடம் | : | 07:05 am, கரூர் |
| நட்சத்திரம் / இராசி | : | திருவாதிரை 3 / மிதுனம் |
| தந்தை பெயர் | : | டாக்டர் M.செந்தில்குமார் Ph.D., |
| தாயார் பெயர் | : | திருமதி S.மகேஷ்வரி |
| குலம் | : | செங்கணி |
| உடன் பிறந்தோர் | : | இல்லை |
| உயரம் | : | 5.10 |
| படிப்பு | : | B.E., MS., (Singapore) |
| தொழில் | : | Own Business (Senthil Safety Solutions Pvt. Ltd.), Chennai / Karur |
| மாத வருமானம் | : | Rs.2,00,000/- per month |
| சொத்து மதிப்பு | : | 80 கோடி |
| உகந்த மணமகள் | : | நேரில் |
| ஜாதக குறிப்பு | : | சுத்த ஜாதகம் (பரிகார செவ்வாய்–பொருந்தும்) |
| தொடர்புக்கு | : | 98436 76333 |

| | | | |
|---|---|---|---|
| சனி<br>கேது | | செவ்,<br>புத<br>சுக் | சூரி<br>சந், லக் |
| | இராசி | | |
| | | | |
| குரு | | மாந் | ராகு |

| | | | |
|---|---|---|---|
| செவ்<br>லக் | புத | | ராகு |
| சந்<br>மாந் | நவாம்சம் | | சுக் |
| | | | |
| கேது | | சூரி<br>குரு<br>சனி | |


# மணமகன் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர்/உயரம் | : | S.இலக்கியா |
| பிறந்த தேதி | : | 28-09-1996 |
| பிறந்த நேரம், இடம் | : | 12:15 pm, சேலம் |
| நட்சத்திரம் / இராசி | : | ரேவதி 4 / மீனம் |
| தந்தை பெயர் | : | திரு. K.சத்தியமூர்த்தி |
| தாயார் பெயர் | : | திருமதி S.இசைவாணி |
| குலம் | : | காரி |
| உடன் பிறந்தோர் | : | சகோதரி ஒருவர் |
| உயரம் | : | 5.5 feet |
| படிப்பு | : | M.E., (Civil) |
| தொழில் | : | M.MOSER (Project Engineer) |
| மாத வருமானம் | : | Rs.70,000/- per month |
| சொத்து மதிப்பு | : | 150 கோடி |
| உகந்த மணமகன் | : | நேரில் |
| ஜாதக குறிப்பு | : | 8ல் செவ்வாய் |
| தொடர்புக்கு | : | 94431 54795 |

| | | | |
|---|---|---|---|
| சந்<br>கேது<br>சனி (வ) | | | |
| | இராசி | | செவ்<br>சுக் |
| | | | புத |
| குரு<br>1–லக் | | மாந் | சூரி<br>ராகு |

| | | | |
|---|---|---|---|
| சந்<br>சுக் | சூரி | ராகு | 1 லக் |
| | நவாம்சம் | | |
| | | | குரு |
| செவ் | புத<br>கேது<br>மாந் | சனி (வ) | |



# இயற்கையின் பாதையில்

## அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது பழமொழி, ஈரோடு மாவட்டம் வெயிலின் தாக்கத்தில் முதல் இடத்தினைப் பிடித்து விட்டோம் என்பதை உணர்கின்றேன். கிட்டத்தட்ட முன்சென்ற ஒரு பத்து வருடங்களில் தேசீய நெடுஞ்சாலை போன்ற திட்டங்களாலும் உள்ளூர்த் திட்டங்களாலும் பெருவாரியாகச் சாலைகளில் அசோகர் காலம் முதல் வளர்ந்திருந்த அனைத்து மரங்களையும் அறுவடை செய்து விட்டோம். விளைவு வெயிலின் ஏற்றத்தில் முன்னணியில் இருக்கின்றோம். நன்மைக்கன்று.

### அந்தோ பரிதாபம்

நெடுஞ்சாலையில் ஒருவர் மயக்கப்பட்டாலோ அல்லது விபத்தில் சிக்கினாலோ அவரை ஒரு சில நிமிடங்களுக்கு ஆம்புலன்ஸ் வரும்வரை கிடத்திவைக்க எந்த ஒரு நிழலும் இம்மியளவுக்குக் கூட இல்லை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அந்த அளவில் நமது அரசாட்சியரும், அதிகாரிகளும், ஏன் மக்களும் கூட விளைச்சல் நிலத்தை விற்றுக் கொண்டே அவர்களுக்கு ஒரு துணையாக இருந்து வருகின்றன. அவர்களுக்கு உறுதுணையாகவும் இருந்து வருகின்றனர். உறுதுணை என்பதை அலசி ஆராய்ந்தால் வெட்கக்கேடு!

### விவசாயி நிலைமை

பயிர் நட்டோம் பலனில்லை; கல்நட்ட பின்னர் நாங்கள் பணம் என்ற பலன் கண்டோம்; என்பது விவசாயிகளின் கூற்று. ஆகவே நெல் நட்ட கழனியெல்லாம் கல்நட்டு விற்றுச் செல்வம் சேர்த்துவிட்டோம் என்ற பெருமிதம் அடைகின்றனர்.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் விலைவாசி உயர்வு. விலைவாசி உயர்வால் அன்றாடம் உயரும் கூலி உயர்வு விளை பொருளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காமையால், கூலி கொடுக்க வக்கில்லாமல் திண்டாடும் விவசாயிகள் நஷ்டம் அடைந்து கொண்டே வந்து விவசாயத்தில் சளைத்துப்போய் நிலத்தை விற்று வருகின்றனர். விற்ற பின்னரே பணம் வந்து நிம்மதியடைகின்றனர். இடுபொருள்களின் விலையும் மிகமிக அதிகம். கடைசியில் விவசாயி கடனாளி ஆகின்றான்.

### என்ன தீர்வு

விவசாய விற்பனையில் ஒரு நல்ல இலாபத்தை உறுதி செய்ய வேண்டும். வருமானம் இருந்தால்தானே ஈடுபாட்டுடன் தொழில் செய்ய முடியும். இயற்கை இடுபொருள் பல இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பலன்பெற்று நல்ல மரபுவழி அரிசி காய்கறிகள், மற்ற பொருட்களையும் உற்பத்தி செய்து “இயற்கை அங்காடி”களில் விற்று வருவதும் பாராட்டக்கூடிய விஷயம்தான். மேலும் மதிப்புக் கூட்டலும் செய்து வருகின்றனர். இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகளால் நுண்ணுயிர்வளத்தை இழந்த மண்மாதிரிகளை

ஆய்ந்து, என்ன இயற்கை உரவழிமுறைகளில் மண்ணின் வளத்தை மீட்டெடுக்கலாம் என்று நிலம் வைத்திருக்கும் நமது கொங்குச் சமுதாயம் ஒவ்வொருவரும் தனிக்கவனம் செலுத்தினால் மட்டுமே நமது பாரம்பரியத் தொழிலாம் உழவுத்தொழிலைக் காப்பாற்ற முடியும்.

**நல்ல பால் மற்றும் பால் பொருட்கள்**

ஒரு விவசாயிக்கு தற்பொழுது அன்றாடத் தேவைக்கான பணத்திற்கு உறுதுணையாக இருப்பது பால்வளமே. நல்ல சத்தான, அதிக கால்சியம் அல்லது சுண்ணாம்புச் சத்து உள்ளபால் என்பது காங்கேயம் நாட்டு இரகப் பசும்பால் ஆகும். மேலும் அம்மாடுகள் மற்றும் கன்றுக்குட்டிகள் நல்ல நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவை. பால்பொருட்களிலும் நாட்டு மாட்டுப் பால் பொருட்களையும் சுவையும் சுகாதாரம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்டவை.

**குடும்ப சுகாதாரம்**

குடும்ப சுகாதாரம் என்பதில் ஐம்பது விழுக்காடு நமது உணவுப்பொருட்கள் மற்றும் முறைகளிலேயே அடங்கி உள்ளது. இதைக் கையாள்பவர்கள் குடும்பத்தலைவிகளே. ஆகவே கொங்குகுடும்பத் தலைவிகளே நீங்கள் முன் உதாணரமாக இருந்து, எனது போனகட்டுரைப் பாடல்களின் (ஆறுவெண்பாக்கள்) சாரத்தை மனதில் கொண்டு இளமை முதலே இவை தழைகளாம் மருந்துப் பொருட்கள் முதல், கீரை வகைகள், நாட்டுரக தானியங்கள் இவைகளுடன், ஏலம், கிராம்பு, தேன் பனங்கற்கண்டு, கம்புமாவு, சுக்கு, மிளக, திப்பிலி இஞ்சி, செம்பருத்தி, நெல்லி, தேங்காய், நெய், வெள்ளருகு, பூளை, அருகம்புல், சுரைக்காய், முள்ளங்கி, முடக்கத்தான், தொட்டால் சினுங்கி, நப்பாலை, பாகல், வெண்டை, கத்தரிபோன்று நமக்கு அன்றாடம் கிடைக்கும் இயற்கைக் காய்கறி, இலை மற்றும் இதர பொருட்களை அன்றாட உணவில் அளவு தெரிந்து சேர்த்து உண்டால் இனிதே வாழலாம்.

எவை எவை என்னென்ன செய்யலாம்

ஏலம், கிராம்பு போன்றவற்றை நாம் பிசையும் மாவுகளில் வாசனைக்காக அளவாகக் கலக்கலாம். பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவை மூலம் இனிப்புச் சுவை கொண்டுவரலாம். உதாரணமாகக் கம்புமாவில் இவைகளை அரைத்துச் சேர்த்துப் பாவாக்கிக் கலக்கலாம். சுக்கு, மிளகு, திப்பிலி போன்றவைகளை அரைத்துப் பொடியாகத் தேனிலிட்டு உண்ணலாம். சளிக்கு இது சரியான



இயற்கை மருந்து அளவுவேண்டும்.

இஞ்சி, செம்பருத்தி, நெல்லி, தேங்காய் போன்றவற்றின் சாறுகளைப் பானங்களாகக் குடிக்கலாம். இவைகளை ஒன்றுகலந்து இனிப்பிட்டும் கோடைக்கு அருந்தலாம். அனைத்திலும் அளவு என்ற தெளிவு வேண்டும்.

வெள்ளருகு, பூளை, அருகம்புல், முடக்கத்தான் போன்றவற்றின் சாரங்களை நமது சட்னி போன்றவற்றிலோ, அல்லது ஒன்றிரண்டு இலைகளையோ மாவில் போட்டு அரைக்கலாம். அளவு மிகத் தேவை. முள்ளங்கி, சுரை போன்ற காய்கறிகளை அதிகம் உபயோகிக்கலாம்.

தொட்டாற்சினுங்கி இலை வதக்கிச் சட்னி தேங்காய் சேர்த்து அரைக்கலாம். பாகல், வெண்டை கத்தரி அவசியம் பொரியலாகச் செய்யலாம். அல்லது துவையல் செய்யலாம்.

**குரோதி வருடம் வருக! வாழ்த்துக்கள் !**

குரோதத்தை ஈன்றெடுக்கும் குற்றப் பிரிவின் விரோதத்தை வெற்றியென; வீழும் - துரோகத்தின் முற்றம்; மழையில்லை; சட்டமிட் டாக்கெனவே குற்றமாகக் கூடிக் களவு.

மேற்கண்ட பாடல் வரிகளை உள்ளுணர்ந்து, வரும் வருடம் எப்படி இருக்குமென்று அறிந்து, நிதானமான விளிப்புணர்வான வாழ்வைக் கடைப்பிடிப்போம். குரோதி வருடம் நன்மையாக, இறைவேண்டி “வருகை குரோதி வாழ்வில் நலம் பயக்க” என்று வரவேற்போம்.

**வாழ்க தமிழ்ப் புத்தாண்டு**